


புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351






## வளர்ந்து வரும் தொழில்களை ஊக்குவிக்க பெரும் குழுமங்கள் அமைக்கப்படும்

# உறுதி

## சென்னை வர்த்தக மையத்தில் நடந்த பன்னாட்டு குறுசிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தினவிழாவில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு



சென்னை , ஜூன்.28-

"உலகளாவிய தரம் மற்றும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், வளர்ந்து வரும் தொழில்துறையில் நுழைய வழிவகை செய்யவும் பெருங்குழுமங்கள் அமைக்கப்படும் என அரசால் அறிவிக்கப்பட்டு, முதல்கட்டமாக 4 பெருங் குழுமங்கள் அமைக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது" என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

சென்னை நந்தம்பாக்கத்தில் உள்ள வர்த்தக மையத்தில், நடந்த பன்னாட்டு குறுசிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தினவிழாவில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று கலந்துகொண்டார். இந்த நிகழ்வில் முதல்வர் ஸ்டாலின் பேசியது: "தமிழகத்தின் பொருளாதார முன்னேற்றத்துக்கு பெரும் பங்காற்றும் MSME துறையின் முன்னேற்றத்துக்காக தமிழக அரசு தனிகவனம் செலுத்தி வருகிறது. ஓய்வுபெற்ற அதிகாரி என்.சுந்தரதேவனின் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. அதன் பரிந்துரைகளின் அடிப்படையில், குறுகிய கால நடவடிக்கைகள், நடுத்தர மற்றும் நீண்ட கால நடவடிக்கைகள் என வகைப்படுத்தப்பட்டு அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

தமிழ்நாடு வர்த்தக வரவுகள் மற்றும் தள்ளுபடி தளமானது கடந்தாண்டு செப்டம்பர் மாதம், "தோள் கொடுப்போம் தொழில்களுக்கு" என்ற தலைப்பில் மதுரையில் என்னால் தொடங்கி வைக்கப்பட்டது. தொழில்முனைவோர்கள் 159 வகையான தொழில் உரிமங்களை 27 அரசுத் துறைகளிடம் இருந்து எளிதாக பெற சிங்கிள் விண்டோ 2.0 தளம், ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபின் துவக்கிவைக்கப்பட்டு, இதுவரை 20 ஆயிரத்து 353 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, இதுவரை 17 ஆயிரத்து 618 தொழில் உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. 1903 விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளன.

தமிழகத்தில் பரவலாக குறுந்தொழில் நிறுவனங்கள் கொண்ட பல்வேறு குறுங்குழுமங்கள் உள்ளன. ஊரகப் பகுதிகளில் நீடித்த நிலையான வேலைவாய்ப்பை உறுதி செய்திடவும், பாலினம் மற்றும் சமூகசமநிலையை உறுதிப்படுத்திடவும் இந்த குறுங் குழுமங்களை மேம்படுத்துவது இன்றியமையாதது. குறுசிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தங்கள் உலகளாவிய தரம் மற்றும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் வளர்ந்து வரும் தொழில்துறையில் நுழைய வழிவகை செய்யவும் பெருங் குழுமங்கள் அமைக்கப்படும் என அரசால் அறிவிக்கப்பட்டு, முதல்கட்டமாக 4 பெருங் குழுமங்கள் அமைக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திண்டிவனத்தில் மருந்துப் பொருட்கள் பெருங்குழுமம், திருமுடிவாக்கத்தில் துல்லிய உற்பத்திப் பெருங்குழுமம், விண்வெளி மற்றும் பாதுகாப்புச் சார்ந்த பெருங்குழுமம் மற்றும் ஸ்மார்ட் மொபிலிட்டி மின்வாகத்துறை சார்ந்த பெருங்குழுமம் ஆகியவற்றை அமைப்பதற்காக விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யும் பணி நடைபெற்று வருகிறது." இவ்வாறு முதல்வர் பேசினார்.

## அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டையில் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பிக்கும் வசதி




**புதுக்கோட்டை , ஜூன்.28-**

**அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டையில் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பிக்கும் வசதி ஏற்படுத்தப்பட்டதாக எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்ககம், இயக்குநர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.**

புதுக்கோட்டை செய்தி மக்கள் தொடர்பு துறை அலுவலகம் வெளியிட்டு இருக்கக்கூடிய செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:-

2023-2024 ஆம் நிதியாண்டிற்கான எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை மானியக் கோரிக்கையின்போது செய்தித் துறை அமைச்சரால், "எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்ககம், சென்னை, மதுரை மற்றும் திருச்சி அரசு கிளை அச்சகங்களில் தற்போது துணை விற்பனை நிலையங்கள் இயங்கி வருகின்றன. மதுரை, திருச்சி மற்றும் சென்னை ஆகிய இடங்களுக்கு பொதுமக்கள் சென்று வர ஏற்படும் கால விரயம் மற்றும் பொருள் விரயம் தவிர்க்கப்படுவதற்காக, பொதுமக்களின் விருப்பத்தின்பேரில் புதுக்கோட்டை அரசு கிளை அச்சகத்தில் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பிக்கும் வசதி ஏற்படுத்தப்படும்" என அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, பொதுமக்களின் நலனுக்காக அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டையில் 26.04.2023 முதல் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பிக்கும் வசதி நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. பொதுமக்கள் பெயர் மாற்றம் செய்ய அரசிதழ் பெற்றிட கட்டணத்தினை e-Challan மூலம் செலுத்த வேண்டும். திருநங்கைகளுக்கு விண்ணப்பங்கள் கட்டணம் ஏதும் இல்லாமல் பெறப்படும். பொது மக்கள் இதனை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உளவுத் துறை ஏடிஜிபி டேவிட்சன் தேவாசீர்வாதம் பணியிட மாற்றம் தமிழக அரசு உத்தரவு



சென்னை , ஜூன்.28-

தமிழக உளவுத்துறை ஏடிஜிபி டேவிட்சன் தேவாசீர்வாதம் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார். தமிழக அரசின் உள்துறை செயலாளர் அமுதா இந்த இடமாற்ற உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இதுதொடர்பாக அரசு சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பில், "தமிழக உளவுத்துறை ஏடிஜிபி டேவிட்சன் தேவாசீர்வாதம் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார். அவருக்குப் பதிலாக உளவுத்துறை ஏடிஜிபி பொறுப்பை டாக்டர் செந்தில் வேலன் ஐபிஎஸ் கூடுதல் பொறுப்பாக கவனிப்பார்.

அதேநேரம், டேவிட்சன் தேவாசீர்வாதம் காவல்துறை தலைமையக ஏடிஜிபியாக பணியிட மாற்றம் செய்யப்படுகிறார். ஆவடி காவல் ஆணையாளராக இருந்த அருண் ஐபிஎஸ் சட்டம் ஒழுங்குகூடுதல் டிஜிபியாக நியமிக்கப்படுகிறார். சட்டம் ஒழுங்கு கூடுதல் டிஜிபியான ஷங்கர் ஐபிஎஸ், ஆவடி காவல் ஆணையாளராக பணியிட மாற்றம் செய்யப்படுகிறார்" என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவி ஸ்ரீமதி விவகாரம் தொடங்கி, அமலாக்கத்துறை ரெய்டு வரை தமிழகத்தில் பல விஷயங்களில் உளவுத்துறை தோல்வி அடைந்துவிட்டதாக விமர்சனங்கள் எழுந்த நிலையில் உளவுத்துறை ஏடிஜிபியாக இருந்த டேவிட்சன் தேவாசீர்வாதம் பணியிட மாற்றம் செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## "பாஜகவுக்கு வாக்கு வங்கி அரசியல் தேவையில்லை" முத்தலாக் முறையை விமர்சித்த பிரதமர் மோடி

போபால், ஜூன்.28-

அரசியலில் வாக்கு வங்கி பாதையில் செல்வதில்லை என பாஜக முடிவு செய்துள்ளது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். அத்துடன், முத்தலாக் முறை பற்றி கடுமையாக விமர்சித்து, பொது சிவில் சட்டத்தை அவர் வலியுறுத்தினார்.

பிரதமர் மோடி நேற்று மத்தியப் பிரதேசத்தின் போபால் நகரில் பாஜக பூத் கமிட்டி உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றினார். 'எனது பூத் எல்லாவற்றையும் விட பலமான பூத்' என்ற பெயரில் நாடு முழுவதும் உள்ள பாஜக பூத் கமிட்டி உறுப்பினர்களில் சிறப்பான பங்களிப்பை செலுத்தியவர்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களை பிரதமர் மோடி இன்று சந்தித்துப் பேசினார்.

அப்போது அவர், "பாஜகவை உலகின் மிகப் பெரியக் கட்சியாக உருவாக்கியதில் மத்தியப் பிரதேசத்துக்கு மிகப் பெரிய பங்கு இருக்கிறது. ஒரு கட்சியின் பலம், அக்கட்சியின் தொண்டர்கள்தான். நீங்கள் குளிர்சாதன வசதி கொண்ட அறைகளில் அமர்ந்து கொண்டு உத்தரவுகளைப் பிறப்பிக்கவில்லை. கடுமையான தட்ப வெப்ப சவால்களை எதிகொண்டு களத்தில் மக்களை சந்திக்கிறீர்கள். பாஜக யாரையும் சமாதானப்படுத்தி வாக்கு வங்கி அரசியல் செய்யாது என முடிவு செய்துள்ளது. இந்தியா வளர வேண்டும் என்றால் கிராமங்கள் வளர வேண்டும்" என்று பிரதமர் மோடி கூறினார்.



முத்தலாக் பற்றிப் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, "முத்தலாக் இஸ்லாத்தில் இருந்து பிரிக்க முடியாதது என்றால் எதற்காக எகிப்து, இந்தோனேசியா, கத்தார், ஜோர்டான், சிரியா, வங்க தேசம் மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளில் அது நடைமுறையில் இல்லை. 90 சதவீத சன்னி முஸ்லிம்களைக் கொண்ட எகிப்தில் முத்தலாக் முறை 80 ஆண்டுகளுக்கு முன்னரே ஒழிக்கப்பட்டுவிட்டது.

ஒரே குடும்பத்துக்கு இரண்டு வெவ்வேறு விதமான சட்டத்திட்டங்கள் எப்படிப் பொருந்தும். அதேபோல் ஒரு தேசம் இரண்டுவிதமான சட்டங்களைக் கொண்டு இயங்க முடியாது" என்று கூறி பொது சிவில் சட்டத்தை வலியுறுத்தினார்.

மேலும், முத்தலாக் முறை பற்றி கடுமையாக விமர்சித்த பிரதமர் மோடிம், "முத்தலாக் நடைமுறையை ஆதரிப்பவர்கள் வாக்கு வங்கிப் பசியில் இருக்கிறார்கள். அவர்கள் முஸ்லிம் மகள்களுக்கு பெரிய அநீதி செய்கிறார்கள். முத்தலாக் நடைமுறை ஒரு பெண்ணை மட்டுமல்ல, ஒட்டுமொத்த குடும்பத்தையும் பாதிக்கிறது. நம்பிக்கையுடன் திருமணத்துக்குள் செல்லும் பெண்மீண்டும் அவள்வீட்டுக்கே அனுப்பப்பட்டால், அவளின் பெற்றோர், சகோதரர்கள் வேதனையடைகின்றனர். அதனால்தான் முத்தலாக் நடைமுறையை ரத்து செய்ததால் நான் எங்கு சென்றாலும் முஸ்லிம் பெண்கள் பாஜகவை ஆதரிக்கின்றனர்" என்றார்.

## மணிப்பூர் மாநிலத்தில் அமைதியை உருவாக்குக அன்னவாசலில் சிபிஎம் ஆர்ப்பாட்டம்



அன்னவாசல் , ஜூன்.28-

மோடி தலைமையிலான ஒன்றிய அரசு மணிப்பூர் மாநிலத்தில் அமைதியை உருவாக்க வலியுறுத்தி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் புதுக்கோட்டை மாவட்டம் அன்னவாசலில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு கட்சியின் ஒன்றியச் செயலாளர்(பொறுப்பு) எம். ஜோதி தலைமை வகித்தார். மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் எஸ்.சங்கர், கே.சண்முகம், மாவட்டக்குழு உறுப்பினர்கள் டி.சலோமி, கி.ஜெயபாலன், ஒன்றியச் செயலாளர் எம்.ஆர். சுப்பையா உள்ளிட்டோர் கண்டன உரையாற்றினர்.

மோடி தலைமையிலான ஒன்றிய அரசு மணிப்பூர் மாநிலத்தில் அமைதியை உருவாக்க வேண்டும். ஒன்றிய அரசின் இரவு நேர மின்சாரப் பயன்பாட்டிற்கான கட்டண உயர்வு அறிவிப்பை திரும்பப் பெறவேண்டும். பலவகையான புறம்போக்குகளில் குடியிருந்துவரும் ஏழை மக்களுக்கு உரிய வகைமாற்றம் செய்து மனைப்பட்டா வழங்க வேண்டும். மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதித்திட்டத்தில் சட்டப்பூர்வ கூலி ரூ.294-ஐ முழுமையாக வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் ஆர்ப்பாட்டத்தின்போது எழுப்பப்பட்டன.



# இன்று

# 28-6-23



மாவிலை பொடியில் பல் துலக்கினால் பல் உறுதியாகும்

சக வருடம் 1945 ஆஷாடம் 07

| சோபகிருது ஆனி 13 | JUN - WED புதன் | துல்ஹிஜ்ஜா 9 வளர்பிறை 179 / 186 | இராசிபலன் |
|---|---|---|---|

வளர்.தசமி 44.59 (மா.11.56) சித்திரை 18.16 (மா.01.14) தியாஜ் 32.33 அகஸ் 31.26 சித்த. கடமுகூர்த்தம். திருத்தங்கல் நின்ற நாராயண பெருமாள் சிறிய திருவடிகளிலும் தாயார் தோளுக்கினியானில் புறப்பாடு. சாகூ ஸாவர்ணி மன்வாதி. அரபா மெக்காவுக்கு ஹஜ் யாத்திரை செய்த நாள்.

| | நல்லநேரம் | கௌ.ந.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 9.15-10.15 | 10.45-11.45 | 12.00 | 10.30 | 07.30 |
| மாலை | 4.45-5.45 | 6.30-7.30 | 01.30 | 12.00 | 09.00 |

சூலம் : வடக்கு; பரிகாரம் : பால்; மிதுன லக்னம் இருப்பு நா. 3 வி. 13; சந்திராஷ்டமம் பூரட்டாதி உத்திரட்டாதி; கரணம் : 6-7.30; சூரிய உதயம் : 5.56

வெற்றியோ தோல்வியோ கடமையை செய்

இராசிபலன்: மேஷம் - திடம், ரிஷபம் - மறதி, மிதுனம் - எதிர்ப்பு, கடகம் - நலம், சிம்மம் - வெற்றி, கன்னி - தடங்கல், துலாம் - ஆசை, விருச்சி - நட்பு, தனுசு - ஈகை, மகரம் - துன்பம், கும்பம் - வரவு, மீனம் - பரிசு

## சிந்திப்போம்.... செயல்படுவோம்

உன் முயற்சி மீது நீ கொண்ட நம்பிகை மட்டுமே பின்னாளில் உன் திறமைகளை அங்கீகரிக்கவும் உன் வெற்றிகளை கௌரவிக்கவும் போகிறது...!




# நெல்லை சிஎஸ்ஐ டயோசிசன் மோதல் விவகாரம் திமுக எம்பி ஞான திரவியம் மீது வழக்குப்பதிவு



நெல்லை , ஜூன்.28-

நெல்லை சிஎஸ்ஐ டயோசீசன் அலுவலக வளாகத்தில் பிஷப்பின் ஆதரவாளர் தாக்கப்பட்ட விவகாரத்தில் திமுக எம்பி ஞான திரவியம் மற்றும் அவரது ஆதரவாளர்கள் 33 பேர் மீது 147, 294 b, 323, 109, 506( 1) என 5 பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

திருநெல்வேலி டயோசீசன் நிர்வாகத்தில், பிஷப் பர்னபாஸ் மற்றும் லே செயலாளர் ஜெயசிங் ஆதரவாளரான திமுக எம்.பி ஞான திரவியம் இருவருக்கும் இடையே மோதல் நீடித்து வருகிறது. டயோசீசன் நிர்வாகத்தில் தனிச்சையாக செயல்படும் எம்.பி. ஞான திரவியம் மீது நடவடிக்கை எடுக்கும் விதமாக ஜான்ஸ் பள்ளி தாளாளர் பதவியில் இருந்தும், திருமண்டல கல்வி குழு நிலவர செயலர் பதவியில் இருந்தும் பிஷப் பர்னபாஸ் அவரை நீக்கி விட்டார்.

இதனைத் தொடர்ந்து ஜான்ஸ் பள்ளி வளாகத்திலும், டயோசீசன் அலுவலகத்திலும் இரு தரப்பினரிடையே குழுக்களாக மோதிக் கொள்ளும் சூழல் ஏற்பட்டிருந்தது. இந்த நிலையில் திமுக தலைமை, எம்.பி.ஞான திரவியம் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரி மத போதகர் காட்பிரே நோபிள் வீடியோ ஒன்றை பதிவிட்டு இருந்தார்.

இதனை அடுத்து திங்கள் கிழமை டயோசீசன் அலுவலக வளாகத்தில் மத போதகர் காட்பிரே நோபிளை அடித்து சட்டையை கிழித்து ஓட ஓட விரட்டி தாக்கினர். இந்த காட்சிகள் சமூக வலைதளங்களில் வைரலானது. தாக்குதலுக்கு உள்ளான மத போதகர் காட்பிரே நோபிள் மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் எம்.பி ஞான திரவியம் மற்றும் அவரது ஆதரவாளர்கள மீது புகார் அளித்துள்ளதாக கூறப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து விசாரணையை தொடங்கிய பாளையங்கோட்டை காவல் நிலைய அதிகாரிகள், திமுக எம்.பி ஞான திரவியம் மற்றும் லே செயலாளர் ஜெயசிங் மற்றும் சொத்து நிர்வாக அதிகாரி மூன்றடைப்பு ஜான், ஆடிட்டர் மைக்கேல் உட்பட 33 பேர் மீது 147-சட்ட விரோதமாக கூட்டம் சேர்த்தல், 294 b - பொது இடத்தில் பிறருக்கு தொல்லை தரும் வகையில் செயல்படுதல், 323 - தன்னிச்சையாக காயப்படுத்தும் செயலில் ஈடுபடுவது, 109 - குற்றம் செய்ய தூண்டி விடுதல், 506 (1) - மிரட்டல் மற்றும் அச்சுறுத்தல் விடுவது என 5 பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

கடந்த இரண்டு வாரங்களாக டயோசீசன் அலுவலகத்தில் நிர்வாக ரீதியிலான மோதல் போக்கு தொடர்ந்து பரபரப்பாகி வரும் நிலையில் தற்போது திமுக எம்.பி மீதும் அவரது ஆதரவாளர்கள் மீது வழக்கு பதிவு செய்திருப்பது இந்த விவகாரத்தில் முக்கிய திருப்பத்தை ஏற்படுத்தி உள்ளது.

# சாதியை சொல்லி திட்டியதாக பட்டியலின பெண் பேரூராட்சி தலைவர் அளித்த புகார் 3 பேர் மீது வழக்கு



பெரம்பலூர் , ஜூன்.28-

பூலாம்பாடி பேரூராட்சி பட்டியலின பெண் தலைவரை சாதி பெயரைச் சொல்லி மிரட்டல் விடுத்ததாக கொடுக்கப்பட்ட புகாரின் பேரில் அரும்பாவூர் போலிஸார் மூன்று பேர் மீது வன்கொடுமை தடுப்புச்சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

பெரம்பலூர் மாவட்டம்வேப்பந்தட்டை தாலுகாவில் உள்ள பூலாம்பாடி பேரூராட்சி தலைவராக இருப்பவர் பட்டியலினத்தைச் சேர்ந்த திமுக உறுப்பினர் பாக்யலட்சுமி (40). கடம்பூரைச் சேர்ந்த இரண்டு பேர் மற்றும் தேனூரைச் சேர்ந்த ஒருவர் என மூன்று பேர் பேரூராட்சி தலைவர் பாக்யலட்சுமியின் வீட்டிற்குச் சென்று வீட்டுமனைப் பிரிவிற்கு அனுமதி வழங்கக் கோரி தகராறில் ஈடுபட்டதோடு, சாதியை சொல்லி திட்டி கொலை மிரட்டல் விடுத்ததாகவும் பாக்யலட்சுமி புகார் அளித்திருந்தார்.

இதையடுத்து புகாரை பெற்றுக்கொண்ட அரும்பாவூர் போலீசார், இதுகுறித்து விசாரணை செய்தனர். புகாரில் முகாந்திரம் இருந்ததை அடுத்து கடம்பூரைச் சேர்ந்த சதீஸ்குமார், ரெங்கநாதன்மற்றும்தேனூர் கிருஷ்ணண் ஆகிய மூன்று பேர் மீது வன்கொடுமை சட்டத்தில் வழக்குப் பதிவு செய்துள்ளனர். மேலும் காவல் நிலையத்தில் தொடர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.




### நடிகர் ரூசோவிடம் ரூ.15 கோடி வாங்கிய

# ஆர்.கே. சுரேஷ் ஆருத்ரா கோல்டு மோசடி விசாரணையில் வெளிவந்த தகவல்




சென்னை , ஜூன்.28-

சென்னை அமைந்தகரையை தலைமை இடமாகக் கொண்டு செயல்பட்ட ஆருத்ரா கோல்டு நிறுவனம், முதலீடுகளுக்கு 25 முதல் 30 சதவிகிதம் வரை வட்டி தருவதாகக் கூறி, சுமார் 1 லட்சம் முதலீட்டாளர்களிடமிருந்து, ரூ.2,438 கோடி மோசடி செய்ததாக புகார் எழுந்தது.

இது தொடர்பான புகார்களின் அடிப்படையில் பொருளாதார குற்றத்தடுப்புப் பிரிவு, அந்த நிறுவனத்தின் இயக்குநர்கள் உட்பட 21 பேர் மீது வழக்குப்பதிவு செய்தது.

இந்த நிலையில், காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஏஜெண்டாகச் செயல்பட்டு கைது செய்யப்பட்ட நடிகர் ரூசோவிடமிருந்து, நடிகர் ஆர்.கே.சுரேஷ் 15 கோடி ரூபாய் பணம் வாங்கியிருப்பது பொருளாதார குற்றப்பிரிவு காவல்துறை விசாரணையில் தெரியவந்துள்ளது. அதனையடுத்து அவரது அலுவலகப் பணியாளர்களிடம் பொருளாதாரக் குற்றப் பிரிவு காவல்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஆர்.கே.சுரேஷின் வங்கிக் கணக்குகளில் செய்யப்பட்டுள்ள பணப் பரிமாற்றம், வங்கிக் கணக்கு விவரங்கள் அனைத்தையும் பொருளாதாரக் குற்றப்பிரிவு காவல்துறை சேகரித்துள்ளனர். ஆருத்ரா நிதி நிறுவன மோசடியில் இதுவரை 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். நீதிமன்றத்தில் முதற்கட்ட குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆருத்ரா நிதி நிறுவன மோசடியில் தொடர்புடைய நடிகர் ஆர்.கே.சுரேஷ் 5 மாதங்களுக்கு மேலாகத் தலைமறைவாகவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இது குறித்து பொருளாதாரக் குற்றப்பிரிவு ஐஜி ஆசியம்மாள், "ஆருத்ரா வழக்கில் 40 பேர்களைக் குற்றவாளிகளாகச் சேர்த்துள்ளோம். ஹிஜாவு வழக்கிலும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளோம்" என்று கூறினார்.

### "மருத்துவராவதே என் கனவு"

# பொறியியல் தரவரிசை பட்டியலில் இடஒதுக்கீட்டின் கீழ் முதலிடம் பிடித்த மாணவி

தருமபுரி , ஜூன்.28-

பொறியியல் படிப்புக்கான தரவரிசை பட்டியலில் அரசுப் பள்ளிகளில் மாநில அளவில் 7.5 சதவீத இட ஒதுக்கீட்டின்படி தருமபுரி அரசு மாதிரி பள்ளி மாணவி மகாலட்சுமி முதலிடம் பிடித்தார்.

பொறியியல் படிப்புக்கான தரவரிசை பட்டியலை உயர்கல்வித் துறை அமைச்சர் பொன்முடி நேற்று முன்தினம் வெளியிட்டார். இதில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கான 7.5 சதவீத இட ஒதுக்கீட்டில், தருமபுரி அரசுப்பள்ளி மாணவி மகாலட்சுமி முதலிடம் பெற்றுள்ளார்.

தருமபுரி மாவட்டம் அன்னசாகரம் பகுதியைச் சேர்ந்த மகாலட்சுமி 200 மதிப்பெண்களைப் பெற்று முதல் இடத்தைப் பெற்றுள்ளார். தருமபுரி அரசு மாதிரி பள்ளியில் கல்வி பயின்று சென்னையில் பயிற்சி பெற்றுள்ள இவர், 12 ஆம் வகுப்பு பொது தேர்வில் 600 மதிப்பெண்களுக்கு 579 மதிப்பெண்களை பெற்றிருந்தார்.

இதையொட்டி மாணவி மகாலட்சுமிக்கு அவரின் பெற்றோர் சீனிவாசன் மற்றும் உறவினர்கள் இனிப்பு ஊட்டி மகிழ்ச்சிகளை பரிமாறிக் கொண்டனர். இந்நிலையில் மாணவி மகாலட்சுமி, மருத்துவம் படிப்பதை தனது கனவாக வைத்து படித்து வந்ததாக தெரிவித்துள்ளார். தற்பொழுது மருத்துவ கலந்தாய்வுக்காக காத்திருக்கிறாராம்.

இது பற்றி அவர் கூறுகையில், "நல்ல மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. ஒருவேளை நல்ல மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்காவிட்டால், அரசு இட ஒதுக்கீட்டின்படி பொறியியல் படிப்பில் சிறந்த துறையை தேர்ந்தெடுத்து பொறியில் படிப்பேன்" என தெரிவித்துள்ளார். மேலும் தனது படிப்பிற்கு உதவிய ஆசிரியர்கள் மற்றும் பெற்றோருக்கு நன்றி தெரிவித்தார்.

# அறந்தாங்கி திசைகள் 18ம் ஆண்டு விருதுகள் வழங்கும் விழா



அறந்தாங்கி, ஜூன்.28-

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி திசைகள் மாணவ வழிகாட்டு அமைப்பின் 18ஆம் ஆண்டு விழா மற்றும் சாதனையாளர்களுக்கு விருதுகள் வழங்கும் விழா, ராஜேந்திரபுரம் நைனா முகம்மது கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்றது.

அறந்தாங்கி இந்திய மருத்துவ கழகம் தலைவர் மருத்துவர் ராமகிருஷ்ணன் தலைமை தாங்கினார். ஐஎம்ஏ முன்னாள் தலைவர் மருத்துவர் லெட்சுமிநாராயணன், மார்க்சிஸ்ட் மாவட்டச் செயலாளர் கவிவர்மன், தமிழ் மாநில காங்கிரஸ், மாநில கொள்கை பரப்புச்செயலாளர் கராத்தே கண்ணையன், ஆவுடையார்கோயில் துணை வட்டாட்சியர் ஜபருல்லா, வணிகர் சங்கப் பேரவை மாவட்டத் தலைவர் வழக்கறிஞர் வரதராஜன், பாண்டி பத்திரம் பாரதநேசன் கணேசன், அறந்தாங்கி தி ஃபோர்ட் சிட்டி ரோட்டரி தலைவர் விகாஸ் சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

திசைகள் அமைப்பின் பொருளாளர் முகமது முபாரக் வரவேற்புரையும், தலைவர் மருத்துவர் தெட்சிணாமூர்த்தி தொடக்க உரையும் ஆற்றினர். புதுக்கோட்டையைச் சேர்ந்த கவிஞர் மற்றும் எழுத்தாளர் நீலா, பேராவூரணியைச் சேர்ந்த சமூக செயற்பாட்டாளர் ஆறு. நீலகண்டன் மற்றும் ராட்சசி மற்றும் கழுவேத்தி மூர்க்கன் திரைப்படங்களின் இயக்குநர் அறந்தாங்கியைச் சேர்ந்த கௌதம்ராஜ் ஆகியோருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதுகள் வழங்கப்பட்டன.

12ம் வகுப்பில் அதிக மதிப்பெண்கள் பெற்ற அறந்தாங்கி, ஆவுடையார்கோயில், மணமேல்குடியைச் சார்ந்த மாணவர்களுக்கு மாணவர் விருதும், அரசுப் பள்ளி ஆசிரியர்கள் 9 பேருக்கு ஆசிரியர் சிஜேஆர் மணி நல்லாசிரியர் விருதும், 10 பேருக்கு திசைகள் அப்துல்கலாம் இளம் சாதனையாளர் விருதும், 6 பேருக்கு திசைகள் குடும்ப சிறப்பு விருதுகளும் வழங்கப்பட்டன. காரைக்குடி மத்திய மின்வேதியல் ஆய்வக மூத்த விஞ்ஞானி ரகுபதி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றினர். நைனா முகம்மது கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தாளாளர் முகமது பாரூக் கௌரவ விருந்தினராக கலந்து கொண்டார்.

அசிரியர் சேதுராமன், பீர் சேக், மணமேல்குடி வட்டார வள மேற்பார்வையாளர் சிவயோகம், கிரீன் முகமது, செலக்சன் மெட்ரிக் பள்ளி முதல்வர் சுரேஷ்குமார், விஸ்வம் மூர்த்தி, மனிதநேய ஜனநாயகக் கட்சி மாவட்டச் செயலாளர் முனைவர் முபாரக் அலி, பேராவூரணி மெய்ச்சுடர் வெங்கடேசன், முனைவர் சண்முகப்பிரியா, அறந்தாங்கி தி ஃபோர்ட் சிட்டி ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவர்கள் கபார்கான், இயன்முறை மருத்துவர் விஜய் சிவானந்தம், முஜிபுர் ரஹ்மான், கர்ணா, ஆசிரியர் டார்வி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். செல்வக்குமார் தொகுப்புரையும், திசைகள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் சேது புகழேந்தி நன்றியுரையும் ஆற்றினர்.

# அரியலூர் திமுக மாவட்ட மகளிர் அணி துணைத் தலைவராக ராணி சந்திரசேகரன் நியமனம்



அரியலூர் ஜூன் 28

அரியலூர் திமுக மாவட்ட மகளிர் அணி துணைத்தலைவராக, ராணி சந்திரசேகரன் நியமிக்கப் பட்டுள்ளார்.

அரியலூர் நகராட்சி, 15 வது வார்டு கவுன்சிலர் ராணி சந்திரசேகரன், திமுக அரியலூர் மாவட்ட மகளிர் அணி துணைத்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். தமிழக போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் பரிந்துரையின் பேரில், தமிழக முதல்வரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின், இதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

# அரியலூரில் நகராட்சி கவுன்சில் கூட்டம் தலைவர் சாந்தி கலைவாணன் தலைமையில் நடைபெற்றது



அரியலூர் ஜூன் 28

அரியலூர் நகராட்சி அலுவலக கூட்ட மன்றத்தில் நடைபெற்ற கவுன்சிலர்கள் கூட்டத்திற்கு நகராட்சி தலைவி சாந்தி கலைவாணன் தலைமை வகித்தார். நகராட்சி ஆணைய பொறுப்பு தமயந்தி முன்னிலை வகித்தார். நகராட்சி வருவாய் ஆய்வாளர் ராஜேந்திரன் தீர்மானங்களை படித்தார்.

அரியலூர் நகராட்சிக்கு புதிய பேருந்து நிலையம் கட்டுவதற்கான அடிப்படை பணிகள் மேற்கொள்ள செயல்படுத்தப்படும் பல்வேறு செலவினங்கள் மற்றும் அலுவலக நிர்வாக செலவினங்கள் உட்பட 47 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில், நகராட்சி அலுவலக மேலாளர் சரஸ்வதி, துணைத் தலைவர் கலியமூர்த்தி, கவுன்சிலர்கள் சத்தியன், ஜெயந்தி, கண்ணன், ரேவதி, மகாலட்சுமி, இன்பவள்ளி, ராணி, இஸ்மாயில், மலர்க்கொடி, வெங்கடாஜலபதி, ஜீவா, புகழேந்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# சிதம்பரம் நடராஜர் கோயிலில் நடப்பது என்ன ? அமைச்சர் சேகர்பாபு விளக்கம்



சென்னை , ஜூன்.28-

"சிதம்பரம் நடராஜர் கோயிலில், ஒரே ஒரு உண்டியல்கூட இருக்காது. மற்ற திருக்கோயில்களில் உண்டியல்கள் இருக்கும். வரவு செலவு இருக்கும். இந்த திருக்கோயிலை இந்து சமய அறநிலையத் துறையிடம் இருந்து எடுக்கின்றபோது, அன்றைக்கு திருக்கோயிலில் இருந்த ரொக்கப் பணம் எவ்வளவு என்பதை இதுவரை தணிக்கை செய்வதற்குகூட அவர்கள் அனுமதிக்க மறுக்கிறார்கள்" என்று இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு கூறியுள்ளார்.

சென்னையில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியது: "சிதம்பரம் திருக்கோயிலில், ஓர் அதிகார மையத்தை ஏற்படுத்திக் கொண்டு தீட்சிதர்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அரசைப் பொருத்தவரையில், வழிபாட்டு முறைகளில், ஆதிகாலம் தொட்டு என்ன வழிபாட்டு முறைகள் பின்பற்றப்படுகிறதோ, அதில் துளியளவுகூட இந்து சமய அறநிலையத் துறை தலையிட்டு வழிபாட்டு முறைகளை மாற்றுகின்ற எண்ணம் இல்லை.

அதே நேரத்தில், திருக்கோயில்கள் மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்டது. அதை டினாமினேஷன் டெம்பிளாக (சமயக் கோயில்) அறிவிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு தொடர்ந்து இது போன்ற சர்ச்சைகளில் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். அரசைப் பொருத்தவரையில், மக்களுடைய நன்கொடைகளால் இந்த திருக்கோயில் நடந்துகொண்டிருக்கிறது. இத்திருக்கோயிலில் பார்த்தால், ஒரே ஒரு உண்டியல்கூட இருக்காது. மற்ற திருக்கோயில்களில் உண்டியல்கள் இருக்கும். வரவு செலவு இருக்கும். இந்த திருக்கோயிலை இந்து சமய அறநிலையத் துறையிடம் இருந்து எடுக்கின்றபோது, அன்றைக்கு திருக்கோயிலில் இருந்த ரொக்கப்பணம் எவ்வளவு என்பதை இதுவரை தணிக்கை செய்வதற்குகூட அவர்கள் அனுமதிக்க மறுக்கிறார்கள்.

அதேபோல், விலை மதிப்புள்ள தங்க நகைகள், திருக்கோயிலுக்குச் சொந்தமான ஆபரணங்கள், தீட்சிதர்கள் திருக்கோயிலுக்கு பொறுப்பேற்றதற்குப் பிறகு இதுநாள் வரையில், எவ்வளவு தங்க நகை வரவு வைக்கப்பட்டுள்ளது என்ற கணக்கைக்கூட அவர்கள் காண்பிக்க மறுக்கின்றனர்.

மேலும் இந்த காலகட்டங்களில் திருக்கோயிலின் வரவைப் பற்றி எந்தவிதமான தகவலையும் தெரிவிக்க மறுக்கிறார்கள். அந்தக் கோயிலை ஏதோ அவர்களுடைய சொந்த நிறுவனம் போல் பாவித்துக் கொண்டுள்ளனர். இதைத்தான் அரசு தட்டிக்கேட்கிறது. மக்கள் பணத்தால், மக்களுடைய முழு அர்ப்பணிப்பால் நடக்கின்ற இத்திருக்கோயிலில், மக்களுக்கும் அரசுக்கும் சேர்க்க வேண்டிய வெளிப்படையான தகவல்களைக் கூட கொடுக்க மறுக்கிறார்கள்.

கனகசபையின் மீதேறி பக்தர்கள் வழிபடுவது குறித்து இந்துசமய அறநிலையத்துறை முடிவெடுக்கலாம் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அந்த தீர்ப்பின் அடிப்படையில் அறநிலையத்துறை சார்பில், கனகசபையின் மீதேறி பக்தர்கள் தரிசனம் செய்ய அனுமதிக்க வேண்டும் என்று அரசு ஒரு ஆணையை பிறப்பித்திருக்கிறது. ஆனால், அவர்கள் திருமஞ்சனத்தைக் காரணம் காட்டி, ஜூன் 24 முதல் 27 வரையிலான 4 நாட்களுக்கு அனுமதி மறுக்கின்றனர். அவர்கள் இவ்வாறு கூறுவதற்கு எந்த நடைமுறையும் இல்லை.

எனவே, இந்த 4 நாட்களும் நீதிமன்றத் தீர்ப்பின்படி, அரசாணையின்படி, கனகசபையின் மீதேறி பக்தர்கள் தரிசனம் செய்ய அனுமதிக்க வேண்டும்" என்று அவர் கூறினார்.

# அருள்மிகு சக்தி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேக விழா



சென்னை, ஜூன் 28-
சென்னை, அம்பத்தூரில் எழுந்தருளி அருள்பாலித்து வரும் அருள்மிகு சக்தி விநாயகர் ஆலய புனராவர்த்தாரண ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நிகழும் சோபகிருது வருடம், ஆனி மாதம் சப்தமி திதி, உத்திர நட்சத்திரம் கூடிய சுபயோக சுப தினத்தில் வெகு விமர்சையாக நடைபெற்றது.

கும்பாபிஷேக விழாவினைத் தொடர்ந்து மகா அபிஷேகம், மகா தீபாராதனை, தீர்த்த பிரசாதம் வழங்கும் நிகழ்ச்சியும் அதனைத் தொடர்ந்து பகல் 12.00 மணி அளவில், புதூர் பிரியா கேட்டரிங் பி.முரளி குடும்பத்தினர் மற்றும் இ. ஜே.பி.மஹால் பாஸ்கர் குடும்பத்தினர் ஏற்பாட்டில் சிறப்பு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. கும்பாபிஷேக விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஆலய திருப்பணி நிர்வாகிகளும் திருப்பணி குழுவினரும் சிறப்பாக செய்திருந்தனர்.



காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் தலைமையில் ஜல்சக்தி அபியான் திட்டத்தின் கீழ் காரைக்காலில் உள்ள குளங்கள், நீர் நிலைகள், வாய்க்கால்கள், ஆறுகள், ஏரிகள் மற்றும் கிணறுகள் ஆகியவற்றை கணக்கிடுதல், சுத்தப்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல் ஆகியவற்றிற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. மேலும் மரம் நடுதல், காடுகள் வளர்த்தல், அலையாத்தி காடுகளை விரிவுபடுத்துதல் தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டது. நீர் நிலைகளில் சுற்றுச்சூழலை பாதுகாப்பது மற்றும் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவது மேலும பாதுகாப்பான குடிநீரை தேக்குவது மற்றும் விநியோகம் செய்வது ஆகியன தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டது. இந்நிகழ்வில் துணை ஆட்சியர் (பேரிடர் மேலாண்மை) பாஸ்கரன் வட்டார வளர்ச்சி அதிகாரி சச்சிதானந்தன் நகராட்சி ஆணையர் செந்தில்நாதன் மற்றும் பொதுப்பணித்துறை அனைத்து கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர்கள் இந்த ஆலோசனை கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

# சீர்காழியில் விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் மாபெரும் இரத்ததான முகாம்



சீர்காழி, ஜூன் 28-
விடுதலை சிறுத்தைகள் கட்சியின்தலைவர்திருமாவளவன் மணிவிழாவை முன்னிட்டு மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அரசு மருத்துவமனையில் விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பாக மாபெரும் இரத்ததான முகாம் வணிகர் அணி மாநில துணை செயலாளர் விஜயரங்கன் தலைமையில் நடைபெற்றது.

இதில் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைமை நிலை செயலாளர் உஞ்சை அரசன் கலந்துகொண்டு ரத்ததான முகாமை தொடங்கி வைத்தார். முகாமில் விடுதலை சிறுத்தைகள் கட்சியை சேர்ந்த 50-க்கும் மேற்பட்டோர் இரத்த தானம் வழங்கினர்.

நிகழ்ச்சியில் விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர் ரவிச்சந்திரன், மதிமுக மாவட்ட செயலாளர் மார்கோனி, சீர்காழி டிஎஸ்பி லா மேக், பெஸ்ட் பள்ளி தாளாளர் ராஜ்கமல், விசிக மாவட்ட செய்தி தொடர்பாளர் தேவா, வணிகர் அணி மாவட்டத் துணைச் செயலாளர் சிறுத்தை சிவா, தொகுதி செயலாளர் தாமு இனியவன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## காரைக்கால் மாவட்டத்தில் பேரிடர் மீட்புத்துறையின் மூலம்

# அடுத்த வாரம் நடைபெறும் பேரிடர் ஒத்திகை நிகழ்வு சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம்



காரைக்கால், ஜூன் 28-
காரைக்கால் மாவட்டத்தில் பேரிடர் மீட்புத்துறையின் மூலம் அடுத்த வாரம் நடைபெறும் பேரிடர் ஒத்திகை நிகழ்வு சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் தலைமையில் நடைபெற்றது.

கடலில் கப்பல் விபத்துகளால் ஏற்படும் எண்ணெய் கசிவு மற்றும் அதனை தொடர்ந்து கடற்கரையில் ஒதுங்கும் எண்ணெய் கழிவுகளை அப்புறப்படுத்துவது சம்பந்தமான பேரிடர் ஒத்திகை நிகழ்வு நமது மாவட்ட நிர்வாகத்தால் வரும் ஜூலை 3ம் தேதி அன்று டி.ஆர் பட்டினம்-பட்டினச்சேரி கடற்கரையில் நடத்த திட்டமிடபட்டுள்ளது. நமது பேரிடர் துறையானது இது தொடர்பாக உள்ள அனைத்து அரசுதுறைகள், தனியார் நிறுவனங்கள், ஆப்தமித்ர மற்றும் குடிமை பாதுகாப்பு படை உறுப்பினர்களை ஒருங்கிணைத்து இந்த ஒத்திகை நிகழ்ச்சியை செயல்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

உடன் இந்நிகழ்வில் பேரிடர் மேலாண்மை துணை ஆட்சியர் பாஸ்கரன் இந்திய கடலோர காவல் படை அதிகாரிகள் பொதுப்பணித்துறை மற்றும் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள். இந்நிகழ்ச்சியின் நிகழ்வுகளை துணை ஆட்சியர் பாஸ்கரன் விரிவாக எடுத்துரைத்தார்.



தேசிய காச நோய் ஒழிப்பு திட்டத்தின் படி "காசநோய் இல்லா பாரதம்" என்ற இலக்கை நோக்கி செயல்படும் வகையில் புதுவை மாநிலத்தின் அனைத்து பிராந்தியத்திலுள்ள காச நோயாளிகள் விரைந்து குணமடையும் நோக்கில் அவர்களுக்கு தேவையான ஊட்டச் சத்து உணவு பொருட்களை காரைக்கால் ஒ என் ஜி சி நிறுவனம் மூலம் ஏற்பாடு செய்து கொடுத்த மாதாந்திர உணவு பெட்டகம் வழங்கும் விழா, நேற்று காரைக்கால் பிராந்தியத்தில் உள்ள அரசு காச நோய் மருத்துவனையில் புதுச்சேரி பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் சு. செல்வகணபதி தலைமையில் ஏற்பாடு செய்து மாதாந்திர உணவு பெட்டகம் வழங்கினார் .காரைக்கால் ஒ என் ஜி சி நிறுவனத்தின் தலைமை அதிகாரி அனுராக் , மனிதவள மேலாளர் ஜோசப் ராஜ், சி எஸ் ஆர் பொறுப்பாளர் விஜய் கண்ணன், பொறுப்பாளர் ராஜசேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில காசநோய் மருத்துவ அதிகாரி டாக்டர் வெங்கடேஷ், உள்ளிருப்பு மருத்துவ அதிகாரி டாக்டர். மதன்பாபு ஆகியோர் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

# கொடூர் கிராமத்தில் புதிய தொழில்பேட்டை தொடக்க விழா நிகழ்ச்சி



செய்யூர்,ஜூன் 28-
செங்கல்பட்டு மாவட்டம் செய்யூர் தாலுகா கொடூர் கிராமத்தில் தமிழ்நாடு அரசு குரு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் தமிழ்நாடு சிட்கோ ரூபாய் 45.94 கோடி திட்ட மதிப்பீட்டில் புதிய தொழில்பேட்டை தொடக்க விழா நிகழ்ச்சி சென்னையில் தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலும் குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் முன்னிலையில் காணொளி மூலம் நடைபெற்றது.

இதனை செய்யூர் தாலுகா கொடூர் கிராமத்தில் உள்ள சிட்கோ தொழில் பேட்டையை காஞ்சி தெற்கு மாவட்ட செயலாளர் க. சுந்தர் எம்எல்ஏ, செய்யூர் சட்டமன்ற உறுப்பினர் பனையூர் பாபு ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

இந்த நிகழ்ச்சியில் விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர் சு. க. ஆதவன் ஒன்றிய செயலாளர்கள் ராமச்சந்திரன், முகையூர் பாபு, விடுதலை கட்சி ஒன்றிய துணை செயலாளர் கொடூர் மு. மணவாளன் அரசு அதிகாரிகள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# பெரியபாளையத்தில் போதை விழிப்புணர்வு உறுதிமொழி-பேரணி



ஊத்துக்கோட்டை, ஜூன்28-
திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், குமரப்பேட்டை ஊராட்சியில் ஆரணி-பெரியபாளையம் நெடுஞ்சாலையில் ராளப்பாடி கிராமத்தில் ஆதரவு இல்லம் (மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான மறுவாழ்வு மையம்) இயங்கி வருகிறது.ஜூன் 26-ம் தேதி உலக போதை ஒழிப்பு தினம் அனுசரிக்கப்பட்டது.இதை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

இப்பேரணியை பெரியபாளையம் காவல் நிலையம் மற்றும் ராளப்பாடியில் அமைந்துள்ள ஆதரவு இல்லம் இணைந்து உலக போதை ஒழிப்பு தினத்தை அனுசரிக்கும் விதமாக பெரியபாளையத்தில் உள்ள செயின்ட்.ஜோசப் உயர்நிலைப்பள்ளி,ஜே. என்.என்.கல்லூரி மாணவ மாணவிகள்,ஆசிரியர்கள் சுமார் 250-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பெரியபாளையத்தில் உள்ள முக்கிய வீதிகளின் வழியாக விழிப்புணர்வு பதாகைகளை ஏந்திய வண்ணம், விழிப்புணர்வு கோஷங்களை எழுப்பிய வண்ணம் முக்கிய வீதிகளின் வழியாகவும் ஊர்வலமாக சென்றனர்.

இவ்விழிப்புணர்வு பேரணியை பெரியபாளையம் காவல் நிலைய போலீஸ் இன்ஸ்பெக்டர் கே.வெங்கடேசன் துவங்கி வைத்தார்.சப்-இன்ஸ்பெக்டர் முனிரத்தினம் மற்றும் போலீசார் பேரணியில் கலந்து கொண்டனர். பேரணியில் கலந்து கொண்ட அனைத்து மாணவர்களும் போதை விழிப்புணர்வு உறுதி மொழியை எடுத்துக் கொண்டனர். இந்நிகழ்ச்சியில், செயின்ட் ஜோசப் மேல்நிலைப் பள்ளி தாளாளர் சேகர் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஆதரவு இல்லத்தின் நிறுவனரும், நிர்வாக அறங்காவலருமான கோட்டீஸ்வரராவ்,இணை நிறுவனர் ஜீவாராவ் மற்றும் ஊழியர்கள் அனிதா மகேஸ்வரி, அபிராமி, தேன்மொழி, ராஜா ரவீந்திரநாத் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.



அவனியாபுரம் நாடார்களுக்கு பாத்தியப்பட்ட ஸ்ரீ ஆண்டாள் மாரியம்மன் கோவில் கும்பாபிஷேக விழா இன்று (28. 6 .2023) புதன்கிழமை காலை 10 மணி அளவில் அவனியாபுரம் மெயின் ரோட்டில் அமைந்துள்ள பாரம்பரியமிக்க திருக்கோவில் திருக்குடமுழுக்கு விழா எனும் கும்பாபிஷேக விழா நடைபெறுவதை முன்னிட்டு யாகசாலை பூஜை நடைபெற்றது. யாகசாலை பூஜையில்தலைவர் பிச்சைக்கனி செயலாளர் உதயசூரியன் பொருளாளர் ராஜேந்திரன் மற்றும் தனசேகர் சரவணன் இந்த ஆண்டாள் அம்மன் கோவிலின் திருப்பணியை ஆரம்பித்த மகேஸ்வரன் ஆகியோர் யாகசாலை பூஜையில் கலந்து கொண்டனர், மேலும் அவனியாபுரம் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# புதிய பள்ளி கட்டிடம் மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினர் பூமி பூஜையை துவக்கி வைத்தார்



செங்கல்பட்டு, ஜூன். 28-
செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பழமத்தூர், நெல்லி ஆகிய இரு கிராமங்களில் ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளி செயல்பட்டு வருகிறது இந்த ஆரம்ப பள்ளியில் போதிய வகுப்பறைகள் இல்லாமல் பள்ளி மாணவ மாணவிகள் படித்து வருவதாக பள்ளி தலைமை ஆசிரியர் மற்றும் பொதுமக்கள் மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமரவேல் அவர்களிடம் கோரிக்கை மனு அளித்தனர்.

இந்த கோரிக்கை மனு அடிப்படையில் மதுராந்தகம் அதிமுக சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமரவேல் சட்டமன்றத் தொகுதியில் இருந்து ஒரு பள்ளி க்கூடத்திற்கு 23.40 லட்சம் மதிப்பீட்டில் இரு வகுப்பறை என இரு பள்ளி கட்டிடங்களுக்கு 46.80 லட்சம் மதிப்பீட்டில் புதிய பள்ளி கட்டிடம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

இதில் மதுராந்தகம் அதிமுக சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமரவேல் கலந்து கொண்டு புதிய பள்ளி கட்டிடம் கட்டுவதற்கான பூமி பூஜை செய்து பணியை அடிக்கல் நாட்டில் துவக்கி வைத்தார் இந்த நிகழ்ச்சியில் மதுராந்தகம் ஒன்றிய செயலாளர்கள் அப்பாதுரை, முதுகரை கார்த்திகேயன் ,மதுராந்தகம் ஒன்றிய குழு தலைவர் கீதா கார்த்திகேயன், ஒன்றிய குழு துணை தலைவர் குமரவேல் அப்பாதுரை, உள்ளிட்ட அதிமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## சீர்காழி பொதுப் பணித்துறை அலுவலகம் முன்பு விவசாயிகள் உள்ளிருப்பு போராட்டம்

# கழுமலையாறு பாசன வாய்க்கால் ஆக்கிரமிப்புகளை அகற்றி முறையாக தூர்வார வேண்டும் என கோரிக்கை



சீர்காழி, ஜூன் 28-
மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் பிரதான பாசன வாய்க்காலாக கழுமலையாறு உள்ளது. கொண்டல் பகுதியில் உருவாகும் கழுமலையாறு அகனி, கோயில்பத்து, சீர்காழி நகர், தாடாலன் கோயில், திட்டை, தில்லைவிடங்கன், சிவனார்விளாகம், திருத்தோணிபுரம், செம்மங்குடி உள்ளிட்ட 20க்கு மேற்பட்ட கிராமங்களில் சுமார் 6,000 ஏக்கர் விளைநிலங்கள் பாசன வசதி பெற்று வருகிறது.

மேலும் சீர்காழி நகர் பகுதியின் பிரதான மழைநீர் வடிகாலாகவும் கழுமலையாறு உள்ளது. இந்நிலையில் கழுமலை ஆறு தூர்வாரும் பணி கடந்த சில நாட்களாக நடைபெற்று வருகிறது. இதில் கோயில்பத்து மற்றும் சீர்காழி நகர் பகுதியில் கழுமலை ஆற்றில் ஆங்காங்கே அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள சிறு பாலங்களாலும், நான்கு வழிச்சாலை பணிகளாலும் முழுமையாக தூர்வார முடியாததால், நகர் பகுதியில் இருந்து மேலோட்டமாக தூர்வாரும் பணி நடைபெறுவதாக விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

மேலும் சீர்காழி அரசு மருத்துவமனை கழிவுநீர், நகர்புற குடியிருப்பு வளாக கழிவுநீர், தனியார் திருமண மண்டப கழிவுநீர் கழுமலை ஆற்றில் விடப்படுவதால் தண்ணீர் மாசடைந்து வருவதாகவும் குற்றம் சாட்டும் விவசாயிகள் நகர்ப்பகுதியில் இருந்து முழுமையாக கழுமலையாறு ஆக்கிரமிப்புகளை அகற்றி தூர்வார வேண்டும் என கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்நிலையில் கழுமலையாறு பாசன விவசாயிகள் சுமார் 50 பேர் சீர்காழி பொதுப்பணித்துறை அலுவலகத்திற்கு வந்து உதவி செயற்பொறியாளரை சந்தித்து கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினர். அப்போது பொதுப்பணித்துறை அதிகாரி விவசாயிகளை உரிய மரியாதை தராமல் நடத்தியதாக கூறப்படுகிறது. இதனால் ஆத்திரம் அடைந்த விவசாயிகள் பொது பணித்துறை அலுவலக வாயிலில் அலுவலர்களை கண்டித்து உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பாசன வாய்க்கால்களை தண்ணீர் வருவதற்குள் முறையாக ஆக்கிரமிப்புகளை அகற்றி தூர்வார வேண்டும் எனவும், பணி திட்டம் குறித்து அறிவிப்பு பலகை வைக்க வேண்டும் எனவும், அதிகாரியை கண்டித்தும் கோஷங்கள் எழுப்பி வருகின்றனர்.

இதையடுத்து பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் விஜயகுமார் விவசாயிகளை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது விவசாயிகளின் குறைகளை, கோரிக்கைகளையும் நிவர்த்தி செய்யப்படும் என்று கூறினார். மேலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து விவசாயிகளுக்கு உரிய உதவிகளை செய்ய வேண்டும் எனவும் கூறி கொண்டார். இதையடுத்து விவசாயிகள் கலைந்து சென்றனர்.

# அருள்மிகு ஸ்ரீ மேகாம்பிகை சமேத ஸ்ரீ மேகநாதேஸ்வரர் ஆலயம் மற்றும் ஸ்ரீ வேத முனீஸ்வரர் ஆலய மகா கும்பாபிஷேக விழா





செங்கல்பட்டு, ஜூன் 28-
செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் வட்டம், மேலக்கோட்டையூர் கிராமத்தில் எழுந்தருளி அருள்பாலித்து வரும் அருள்மிகு ஸ்ரீ மேகாம்பிகை சமேத ஸ்ரீ மேகநாதேஸ்வரர் ஆலயம் மற்றும் ஸ்ரீ வேத முனீஸ்வரர் ஆலய மகா கும்பாபிஷேக விழா, நிகழும் மங்களகரமான சோபகிருது வருடம், ஆனி வளர்பிறை சப்தமி, உத்திர நட்சத்திரம், சித்தயோகம் கூடிய சுப தினத்தில் சிம்ம லக்னத்தில் வெகு விமர்சையாக நடைபெற்றது.

கும்பாபிஷேக விழாவினை தொடர்ந்துமகா அபிஷேகம்,மகா தீபாராதனை, தீர்த்த பிரசாதம் வழங்கும் நிகழ்ச்சியும் அதனைத் தொடர்ந்து பகல் 12.00 மணி அளவில் சிறப்பு 10ஆயிரத்திற்கும் அதிகமானோர் கலந்து கொண்ட சிறப்பு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது.

கும்பாபிஷேக விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஆலய நிர்வாகிகள் முரளி, சிவா மற்றும் பிரபாகரன் ஆகியோருடன் இணைந்து கும்பாபிஷேகவிழா குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர். ஆலய திருப்பணி வேலைகளை திருக்கடையூர் மாயகிருஷ்ணன் அழகிய வேலைப்பாடுகளுடன் சிறப்பாக செய்திருந்தார்.

# வண்டலூரை அடுத்த கொளப்பாக்கம் பெரியநாயகி அம்பிகா சமேத ஸ்ரீ அகஸ்தீஸ்வரர் சுவாமி ஆலய மகா கும்பாபிஷேக விழா



செங்கல்பட்டு, ஜூன் 28-
செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூரை அடுத்த கொளப்பாக்கம் பெரியநாயகி அம்பிகா சமேத ஸ்ரீ அகஸ்தீஸ்வரர் சுவாமி ஆலய புனராவர்த்தாரண ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா சோபகிருது வருடம், ஆனி மாதம் சப்தமி திதி, உத்திர நட்சத்திரம் கூடிய சுபயோக சுப தினத்தில் காலை 9.00 மணிக்கு மேல் 10:30 மணிக்குள் சிம்ம லக்னத்தில் வெகு விமர்சையாக நடைபெற்றது.

கும்பாபிஷேக விழாவில், கொளப்பாக்கம், ஊனைமாஞ்சேரி ஒன்றிய கவுன்சிலர் கே என் எஸ்.நேதாஜி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு கும்பாபிஷேக விழாவினை சிறப்பித்தார்.

கும்பாபிஷேகத்தை தொடர்ந்து மகா அபிஷேகம், மகா தீபாராதனை, தீர்த்த பிரசாதம் வழங்கும் நிகழ்ச்சியும் அதனைத் தொடர்ந்து பகல் 11.00 மணி அளவில் சிறப்பு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. கும்பாபிஷேக விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஆலய திருப்பணி நிர்வாகிகளும் திருப்பணி குழுவினரும் சிறப்பாக செய்திருந்தனர்.

# மதுரவாயல் அருள்மிகு ஸ்ரீ கற்பக விநாயகர் திருக்கோவில் மகா கும்பாபிஷேக விழா



சென்னை, ஜூன் 28-
சென்னை, மதுரவாயல், கிருஷ்ணா நகரில் எழுந்தருளி வேண்டியவர்களுக்கு வேண்டியதை அருளி, அருள்பாலித்து வரும் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் விழா ஆனி மாதம் காலை 9.00 மணிக்கு மேல் 10.00 மணிக்குள் வெகு விமரிசையாக நடைபெற்றது.

வேளாக்குறிச்சி ஆதீனம் 18வது குருமகா சன்னிதானம்ஸ்ரீலஸ்ரீ சத்ய ஞான மகாதேவ தேசிக பிரம்மச்சாரிய சுவாமிகள் முன்னிலையில் நடைபெற்ற இந்த கும்பாபிஷேக விழாவில், கும்பாபிஷேகத்தை தொடர்ந்து மகா அபிஷேகம், மகா தீபாராதனை, தீர்த்த பிரசாதம் வழங்கும் நிகழ்ச்சியும் அதனைத் தொடர்ந்து பகல் 12.00 மணி அளவில் சிறப்பு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது.

கும்பாபிஷேக விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஸ்ரீ கற்பக விநாயகர் டிரஸ்ட்டைச் சேர்ந்த திருப்பணி நிர்வாகிகளும்திருப்பணி குழுவினரும் சிறப்பாக செய்திருந்தனர்.

# ஒலியமங்கலம் ஊராட்சியில் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு சிறப்பு கால்நடை மருத்துவ முகாம் அமைச்சர் ரகுபதி துவக்கி வைத்தார்



பொன்னமராவதி , ஜூன். 28–

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி ஒன்றியம், ஒலியமங்கலம் ஊராட்சியில் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, மாபெரும் சிறப்பு கால்நடை மருத்துவ சிகிச்சை முகாமினை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி நேற்று துவக்கி வைத்து, காட்சிப்படுத்தப்பட்டுள்ள கால்நடைஉணவுவகைகளை பார்வையிட்டு, சிறந்த பால் உற்பத்தியாளர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கி, கால்நடைக்கான தீவணப் பயிர்களை கால்நடை வளர்ப்போரிடம் வழங்கினார்.

பின்னர் அவர் பேசுகையில், பொன்னமராவதி ஒன்றியம், ஒலியமங்கலம் கிராமத்தில், கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், கால்நடை பராமரிப்புத்துறை, பால்வளத்துறை மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் இணைந்து நடத்தும், மாபெரும் சிறப்பு கால்நடை மருத்துவ சிகிச்சை முகாம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

கால்நடை வளர்ப்போர் அனைவரும் தங்களது கால்நடைகளுக்கு வழங்க வேண்டிய சத்தான உணவு வகைகள், தாது உப்பு கலவை உள்ளிட்டவைகளை இம்முகாமில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள உணவு வகைகளை அறிந்து கொண்டு தங்களது கால்நடைகளுக்கு வழங்க வேண்டும். மேலும் குறைந்த செலவில் கோழி வளர்ப்பு திட்டத்திற்காக மறவாமதுரை, இடையாத்தூர், ஒலியமங்கலம் ஆகிய 3 இடத்திலிருந்து 100 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். ஒலியமங்கலத்தில் ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் கால்நடை மருந்தகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. கால்நடைகளுக்கான தடுப்பூசிகள், சத்தான உணவுகளை முறையாக வழங்க வேண்டும்.

எனவே கால்நடை வளர்ப்போர் அனைவரும் தமிழக அரசின் மூலம் செயல்படுத்தப்படும் இதுபோன்ற கால்நடை மருத்துவ சிகிச்சை முகாமில் தங்களது கால்நடைகளுக்கு சிகிச்சைகள் அளித்து பயன்பெற வேண்டும் என தெரிவித்தார்.

இம்முகாமில், மண்டல இணை இயக்குநர் (கூ.பொ.) மரு.எஸ்.எஸ்.அரசு, இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் குழந்தைசாமி, பொது மேலாளர் (ஆவின்) எஸ். தங்கமணி, மண்டல ஆராய்ச்சி மற்றும் கல்வி மையம் பேராசிரியர் மற்றும் தலைவர் மரு.பூ.புவராஜன், உதவி இயக்குநர் (கா.ப) மரு.ஆர்.பாபு, ஊராட்சிமன்றத் தலைவர் சி.சோலையம்மாள் சிவக்குமார் ஒலியமங்கலம், முருகேசன் மேலத்தானியம், ஒன்றியக்குழு உறுப்பினர் வி.சிவரஞ்சனி வினோத்குமார், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# அமலாக்கத் துறையால் பாதிக்கப்பட்டவர்களே பீகாரில் கூட்டம் நடத்தினர் ஹெச்.ராஜா



**சிவகங்கை , ஜூன். 28–**

**"தமிழ் தேசியம் என்ற பிரிவினைவாதத்தை சீமான் கைவிட்டுவிட்டால், பாஜகவுடன் அவர் நெருங்கி வரலாம்" என தமிழக பாஜகவின் மூத்த தலைவர் ஹெச்.ராஜா தெரிவித்துள்ளார்.**

சிவகங்கையில் பாஜக சார்பில் நடைபெற்ற மத்திய அரசின்9ஆண்டுகாலசாதனை விளக்க கண்காட்சியை ஹெச். ராஜா தொடங்கி வைத்தார். பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: "நாட்டின் குடிமகன் யார் வேண்டுமானாலும் அரசியலுக்கு வரலாம். விஜய் அரசியலுக்கு வருவதை வரவேற்கிறேன். சினிமா பிரபலம் மட்டுமே அரசியலுக்கு உதவாது என திருமாவளவனின் கருத்தை ஏற்கிறேன்.

இந்த நாட்டை கொள்ளையடித்தோரில் பசிதம்பரமும் ஒருவர். அவர் அதிகமாக பேசக் கூடாது. கடந்த 2014-ம் ஆண்டு மோடி தலைமையிலான பாஜக ஆட்சி அமையவில்லை என்றால் இந்தியா பிச்சைக்கார நாடாக மாறியிருக்கும்.

தமிழகத்தில் மெட்ரோ ரயில் பணிக்கு தகுதி இருந்தும் ஒப்பந்தம் கிடைக்காதவர்களே சிபிஐக்கு புகார் அளித்துள்ளனர். ஆறாவது நபராக தான் அண்ணாமலை புகார் அளித்துள்ளார். விரைவில் நீதிமன்றம் உத்தரவில் மு.க.ஸ்டாலினை சிபிஐ விசாரிக்க வாய்ப்புள்ளது.

திமுக எம்பி ஞானதிரவியம், பாதிரியாரை தாக்கியது கண்டிக்கத்தக்கது. அவரை கட்சியில் இருந்து நீக்க வேண்டும். ஆனால், அவருக்கு விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பியதுஎன்பது கண்துடைப்பு நாடகம்.

அனைத்து கட்சி கூட்டம் நடந்துள்ள நிலையில் மணிப்பூர் கலவரம் விரைவில் முடிவுக்கு வரும். சிதம்பரம் நடராஜர் கோயில் தீட்சிதர்கள் மீது பொய் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அங்கு செல்லவே அறநிலையத் துறைக்கு அதிகாரமில்லை. சட்டத்தை அறியாதவரே அமைச்சராக உள்ளார். அமலாக்கத் துறையால் பாதிக்கப்பட்டவர்களே பீகாரில் கூட்டம் நடத்தினர். அடுத்த கூட்டம் சிம்லாவில் நடைபெற வாய்ப்பில்லை. பாஜகவில் பிரதமர் வேட்பாளர் மோடி. ஆனால்,அங்கு கூடியவர்களில் யார் பிரதமர் வேட்பாளர்?" என்றார்.

மேலும்பேசியஅவர்,"சீமான் பேசக் கூடிய விஷயங்களை அவருக்கு முன்பே நான் பேசியிருக்கிறேன். சீமான் தமிழ் தேசியத்தை கைவிட்டால் பாஜகவுடன் நெருங்கி வரலாம். தமிழ் தேசியம் என்பது பிரிவினைவாதம், இந்திய தேசியம் என்பதே ஒற்றுமை. மற்றபடி அவர் திராவிடத்தை எப்படி ஏற்றுகொள்ளவில்லையோ, நானும் ஏற்றுகொள்ளவில்லை. சீமான் என் நண்பர். பிரிவினைவாதத்தை விட்டு, பகுத்தறிவோடு சிந்தித்து அவரின் நிலைப்பாட்டில் மாற்றம் வருகிறதா என பார்ப்போம். மாற்றம் வந்தால் அடுத்து பேசுவோம்" என ஹெச்.ராஜா தெரிவித்துள்ளார்.

### தொடர்ந்து பத்தாவது ஆண்டாக கம்பன் கழக போட்டிகளில்

# அதிக பரிசுகள் வென்ற பள்ளி ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக். மேல்நிலைப்பள்ளி



புதுக்கோட்டை , ஜூன். 28–

புதுக்கோட்டை திருக்கோகர்ணம் ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக். மேல்நிலைப்பள்ளி மாணவர்கள்கம்பன்பெருவிழா போட்டிகளில்கலந்துகொண்டு வழக்கம்போலவே பத்தாவது ஆண்டாக அதிக பரிசுகளை வென்றுள்ளனர்.

எல்கேஜி முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரைக்கும் நடத்தப்பட்ட கம்ப ராமாயணப் பாடல்கள் ஒப்புவித்தல் போட்டியிலும், கம்பராமாயணப் பேச்சுப் போட்டி மற்றும் ஓவியப்போட்டியிலும் வெங்கடேஸ்வரா மெட்ரிக். மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் அதிக அளவில் கலந்து கொண்டு அதிக அளவிலான பரிசுகளை வென்றுள்ளனர்.

கம்பராமாயணப் பாடல் ஒப்புவித்தல் போட்டியில் முதல் வகுப்பு மாணவர் பி.கருணாசாகர் இரண்டாம் பரிசும், ரோஜா ஸ்ரீ சிறப்பிடமும் பெற்றனர். இரண்டாம் வகுப்பில் பி.லிங்கேஸ்வரன், ஆ. ஆண்டோமிலானி ஆகியோர் முதல் பரிசும், மூன்றாம் வகுப்பில் கா. வீரகேசவ், வெ. சபரிகிருஷ்ணன் ஆகியோர் சிறப்பிடம் பெற்றனர். நான்காம் வகுப்பில் வெ. தேவிகா, ஜெ.அதியன், ஆகியோர் சிறப்பிடம் பெற்றனர். ஐந்தாம் வகுப்பில் வி. தேவதர்ஷன் இரண்டாம் பரிசும், சு. வர்ணிகாஸ்ரீ சிறப்பிடமும் பெற்றனர். ஆறாம் வகுப்பில் அ.அஅதியன் முதல் பரிசும் வே. யாழினி மூன்றாம் பரிசும் ஏழாம் மற்றும் எட்டாம் வகுப்பில் கா.லோகித் மூன்றாமிடமும் .ப.சர்விகா சிறப்பிடமும் பெற்றனர்.

ஒன்பதாம் வகுப்பு பேச்சுப்போட்டியில் உ. உதயரிஷ்னியா முதல் பரிசும், அ.அ. அட்சயா ஸ்ரீ இரண்டாம் பரிசும் பெற்றனர். மேல்நிலை முதல் மற்றும் இரண்டாம் ஆண்டு சா.ஸ்ரீ.ஹரினி முதல் பரிசும், சு.கோபிகா ஸ்ரீ மூன்றாம் பரிசும் பெற்றனர். மாவட்ட அளவில் அதிக அளவில் கம்பன் கழகப் போட்டிகளில் கலந்து கொண்டு அதிக அளவில் பரிசுகளை வென்று தொடர்ந்து பத்தாம் ஆண்டாக வெற்றிக்கோப்பையை தக்கவைத்துக் கொண்டுள்ளது. பரிசுகள் கம்பன் பெருவிழா நிறைவு நாளில் வழங்கப்படும். கம்பன் கழகப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களை பள்ளியின் முதல்வர் கவிஞர் தங்கம் மூர்த்தி மற்றும் "ஆசிரியர் மனசு" திட்ட மாநில ஒருங்கிணைப்பாளர் கவிஞர் சிகரம் சதீஷ் பள்ளியின் துணை முதல்வர் குமாரவேல் மற்றும் ஆசிரியப் பெருமக்கள் வாழ்த்திப் பாராட்டினர்.

# கந்தர்வகோட்டையில் அதிமுக புதிய உறுப்பினர் சேர்க்கை விஜயபாஸ்கர் பங்கேற்பு



கந்தர்வகோட்டை , ஜூன். 28–

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டையில் அதிமுக புதிய உறுப்பினர் சேர்க்கை முகாம் நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சரும் விராலிமலை எம்எல்ஏ வுமான விஜயபாஸ்கர் கலந்து கொண்டார்.

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை சட்டமன்ற தொகுதி, கந்தர்வகோட்டை கிழக்கு, தெற்கு , மேற்கு ஆகிய ஒன்றியங்களுக்கான, உறுப்பினர் புதுப்பித்தல் மற்றும் புதிய உறுப்பினர் சேர்த்தல் குறித்த ஆலோசனை கூட்டம் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் விஜயபாஸ்கர் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதனை தொடர்ந்து, ஒவ்வொரு ஊராட்சி வாரியாக அதிகப்படியான உறுப்பினர் படிவங்கள் சேர்த்த அதிமுக நிர்வாகிகளுக்கு சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.



**தமிழ் தேசிய தந்தை எல்லை போராட்ட வீரர் சிலம்பு செல்வர் ம பொ சிவஞானம் 118 வது பிறந்தநாள் விழா தென்காசி மாவட்டம் அகரக்கட்டில் உள்ள தமிழ்நாடு நாடார் உறவின் முறைகள் கூட்டமைப்பின் தலைமை அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மபொசி திருஉருவப் படத்திற்கு தமிழ்நாடு நாடார் உறவின் முறைகள் கூட்டமைப்பின்நிறுவனத் தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார் தலைமை வகித்து மலர் தூவி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் பொதுச் செயலாளர் ஆனந்த் காசிராஜன், பொருளாளர் சுப்பிரமணியன், தென்காசி மாவட்டத் தலைவர் ராஜ்நயினார், தென்காசி மாவட்ட இளைஞரணி துணைத் தலைவர் கணேசன், மற்றும் நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர், முடிவில் பொருளாளர் சுப்பிரமணியன் அனைவருக்கும் நன்றி கூறினார்.**

# திருமயத்தை அடுத்த இருதயபுரம் கிறிஸ்துராஜா பள்ளியில் இயற்கை சுற்றுச்சூழல் விழிப்புணர்வு முகாம்



திருமயம், ஜூன். 28–

புதுக்கோட்டை மாவட்டம் திருமயத்தை அடுத்த இருதயபுரம் கிறிஸ்துராஜா பள்ளி மற்றும் பாரத மிகுமின் நிறுவன ஊழியர்களின் சமூக சேவை அறக்கட்டளை இணைந்து நடத்திய இயற்கை சுற்றுச்சூழல் விழிப்புணர்வு முகாம் மற்றும் 100 மரக்கன்றுகள் நடும் விழா நடைபெற்றது, விழாவிற்கு கிறிஸ்துராஜா கல்வி குழும தாளாளர் சூசை தலைமை வகித்தார்.

புதுகை மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் சாலை செந்தில் முன்னிலை வகித்தார், விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் கிறிஸ்துராஜா உயர்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர்எம் குயிண்டன் வரவேற்றுப் பேசினார் பாரத மிகுமின் நிறுவன சமூக சேவை அறக்கட்டளை சார்பாக மாணவ மாணவிகளுக்கு கட்டுரை போட்டி, ஓவிய போட்டி, பேச்சுப்போட்டி ஆகியவைகளை நடத்தி வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசு பொருட்களும் சர்டிபிகேட் வழங்கினார்கள். மேலும் இவ்விழாவில் சமூக சேவை அறக்கட்டளை தலைவர் பாலாஜி பொதுச் செயலாளர் சதன் குமார் சுற்றுச்சூழல் துறை நல்ல சிவன், கணேசன், ஸ்ரீதர், குமார், விஜயகுமார், குரு பாலன், பார்த்தசாரதி, சிதம்பரம் மணி மற்றும் ஆசிரியர்கள் அருள் மேரி, ஜாக்குலின், அல்போன்சா, சாந்தி, இளையராஜா, பசுமை படை பொறுப்பாளர் அழகம்மை கலைச்செல்வி ஆகியோர் பங்கேற்றனர் விழாவின் இறுதியில் தலைமை ஆசிரியை சேசுமேரி நன்றி கூறினார்.

# குற்றாலத்தில் நடைபெறும் வளர்ச்சிப் பணிகளை தென்காசி சட்டமன்ற உறுப்பினர் பழனி நாடார் நேரில் ஆய்வு



தென்காசி, ஜூன்.28–

தென்காசி மாவட்டம் குற்றாலத்தில், பேரருவி, ஐந்தருவி, பழைய குற்றாலம், புலியருவி, வனத்துறை கட்டுப்பாட்டில் உள்ள சிற்றருவி, சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதி இல்லாத தேனருவி மற்றும் செண்பகாதேவி அருவி என ஏராளமான அருவிகள் உள்ளன. இங்கு ஆண்டு தோறும் ஜூன், ஜூலை, ஆகஸ்ட் ஆகிய மூன்று மாதங்கள் பருவநிலை காலங்களாகும். இங்கு விழும் மெல்லிய சாரல் மழைக்கும், வீசும் தென்றல் காற்றுக்கும் அதிகமான சுற்றுலா பயணிகள் வந்து சீசனை அனுபவித்து செல்கின்றனர்.

இங்குள்ள அருவிகள் மற்றும் அதனை சார்ந்த பகுதிகளை மேம்படுத்தவும், உள் கட்டமைப்பு வசதிகள், பழுதடைந்த கட்டிடங்களை மேம்படுத்தவும், பயன்படுத்தாத நிலையில் உள்ள கட்டிடங்களை இடித்து புதிய கட்டிடங்கள் கட்டவும், மேலும் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள அரசு 11 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த பணிகளை தென்காசி சட்டமன்ற உறுப்பினரும் காங்கிரஸ் கட்சியின் மாவட்டத் தலைவருமான எஸ்.பழனி நாடார் பார்வையிட்டார். குற்றாலம் ஐந்தருவி, அதன் அருகே உள்ள எக்கோ பார்க் ஆகிய பகுதிகளை பார்வையிட்டு திடீர்ஆய்வு மேற்கொண்டார், பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என அதிகாரிகளை கேட்டு கொண்டார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட ஊராட்சி மன்ற துணைத் தலைவர் உதயகிருஷ்ணன், வட்டாரத் தலைவர் பெருமாள், மாவட்ட துணை தலைவர் சண்முகவேல், மாவட்ட பொதுச்செயலாளர் ஏஜிஎம் கணேசன், தென்காசி நகரத் தலைவர் மாடசாமி ஜோதிடர், சுற்றுச்சூழல் பூங்கா மேலாளர் மூக்கம்மாள், துணைத் தலைவர் சித்திக், சந்தோஷ்,பிரபு, அரவிந்த், மூர்த்தி, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டை சிட்டி ரோட்டரி சங்க பணியேற்பு விழா நலத்திட்ட உதவிகள் வழங்கல்



**புதுக்கோட்டை , ஜூன். 28–**

புதுக்கோட்டை சிட்டி ரோட்டரி சங்க 9ஆம் ஆண்டு பணியேற்பு விழா சங்கத் தலைவர் சிவக்குமார் தலைமையேற்று வருகை தந்த அனைவரையும் வரவேற்றார். முன்னதாக தமிழ் தாய் வாழ்த்து தேசிய கீதம் மாணவி நேத்ராஸ்ரீ பாடினார். தொடர்ந்து ரோட்டரி பிரார்த்தனை செல்வரத்தினம் வாசித்தார். குத்துவிளக்கினை மாவட்ட ஆளுநர் ஆனந்த ஜோதி ராஜ்குமார், ராஜேஸ்வரி அசோகன், கோகிலா அரசகுமார், உஷா தேவி சங்கர் ஏற்றினார்கள்.

சென்ற வருட அறிக்கையினை செயலாளர் செந்தில்வேல் வாசித்தார். 2023–24 ஆம் ஆண்டின் ரோட்டரி மாவட்டம் 3000 ஆளுநர் ஆனந்த ஜோதி ராஜ்குமார் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு புதுக்கோட்டை சிட்டி ரோட்டரி சங்க தலைவர் அசோகன், செயலாளர் முத்தன் அரசகுமார், பொருளாளர் சங்கர் ஆகியோருக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்து வாழ்த்துரை வழங்கினார்.

புதிய தலைவராக பொறுப்பேற்ற அசோகன் ஏற்புரை வழங்கும்போது இந்த ஆண்டில் மாவட்ட ஆளுநரின் கனவு திட்டமான பிங்க் ஆட்டோ, அரசு பள்ளிகளில் படிக்கும் பெண் குழந்தைகளுக்கு கழிவறை கட்டித் தருவது, திட்டங்களை செய்து தருவேன் என்று கூறி அடுத்த ஆண்டின் நிர்வாகிகளை அறிவித்தார். சங்கத்தில் புதிய உறுப்பினர்கள் ஜபருல்லா தலைமையில் ஏழு பேர் அறிமுகம் செய்யப்பட்டனர். அதனை மண்டல ஒருங்கிணைப்பாளர் ஆரோக்கியசாமி, துணை ஆளுநர் ஜெயக்குமார் சங்கத்தில் இணைந்த புதிய உறுப்பினர்களுக்கு வாழ்த்துரை வழங்கினார்கள்.

2025–26 ஆம் ஆண்டின் ரோட்டரி மாவட்ட ஆளுநர் கார்த்திக் ஜெயராமன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிட்டி மலர் தொகுப்பாளர்கள் கண.மோகன்ராஜா, கோடீஸ்வரா அழகப்பன் வெளியிட மாவட்ட ஆளுநர்கள் ஆனந்த ஜோதி ராஜ்குமார், கார்த்திக் ஜெயராமன், சங்க தலைவர் அசோகன் பெற்றுக்கொண்டனர். தந்தையை இழந்த பவித்ரா என்ற மாணவிக்கு, சுசீந்திரம் என்ற மாணவருக்கும் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது. நார்த்தாமலையில் புதிதாக கட்டப்பட்டு 29.6.2023 அன்று கும்பாபிஷேகம் நடைபெற உள்ள சத்குரு சம்ஹார மூர்த்தி ஆலயத்திற்கு மேளதாள கருவியினை ஆலய நிர்வாகி செந்தில்வேல் பெற்றுக்கொண்டார். குழிபிறையைச் சேர்ந்த கணவரால் கைவிடப்பட்ட கல்யாணி, சிட்டாள் என்பவருக்கும் சலவைப்பெட்டி வழங்கப்பட்டது. பள்ளத்திவிடுதியைச் சேர்ந்த சங்கீதா, சுகந்தி என்ற பெண்களுக்கு விவசாய மருந்து தெளிப்பான் கருவி வழங்கப்பட்டது. மேலும் பல்வேறு நிகழ்வில் சாதனை புரிந்து வெற்றி பெற்ற முனைவர் ரமேஷ்,பாபு,முத்து கிஷோர்,கார்த்திக்ரகுநாத், ஹரி கிருஷ்ணன், சுப்பிரமணியன், ஆகாஷ், குமரி ஆனந்தன், அகமதுதாரிக், நேத்ரா ஸ்ரீ, காவியா ஸ்ரீ, சௌந்தர்யா, சாருபாலா, தமிழ்அமுது, பூஜா ஆகியோருக்கு சான்றிதழும் விருதும் வழங்கி வாழ்த்துரை வழங்கினார்கள். பட்டிமன்ற பேச்சாளர் ஆலங்குடி வெள்ளைச்சாமி சிறப்பு பேச்சாளராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் புதுக்கோட்டை நகர மன்ற தலைவர் திலகவதி செந்தில், சங்கத்தின் முன்னாள் தலைவர்கள் பார்த்திபன்,தனகோபால், தங்கம் மூர்த்தி, மீனா சுப்பையா,சண்முகவேல் மணப்பாறை கார்த்திக், பெரம்பலூர் அம்பி, மற்றும் ரோட்டரி சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர். நிறைவாக செயலாளர் முத்தன் அரசகுமார் நன்றிகூறினார்.



**புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளம் ஊராட்சி ஒன்றிய குழு சாதாரண கூட்டம் ஒன்றிய குழுத் தலைவர் வள்ளியம்மை தங்கமணி தலைமையில் நடைபெற்றது. ஒன்றிய ஆணையர் ஆயிஷா ராணி வட்டார வளர்ச்சி அலுவலர் ஊராட்சிகள் கோகுல கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் செலவு அறிக்கையை துணி வட்டார வளர்ச்சி அலுவலர் நிர்வாகம் முருகன் வாசித்தார், கொத்தமங்கலம் ஊராட்சியில் கடந்த 2020 ஆம் ஆண்டு இ சேவை மைய கட்டிடம் கட்ட ரூபாய் 79 லட்சத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டிட பணி துவங்கி அஸ்திவாரம் போட்டதோடு கம்பிகள் எல்லாம் துருப்பிடித்து காணப்படுகின்றது, இந்தப் பணி எப்போது நடைபெறும் அல்லது பணியை ரத்து செய்யப்படுமா என்று கேள்வி எழுப்பினார் இதற்கு ஒன்றிய ஆணையர் விரைவில் பணிகளை முடிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக கூறினார். கூடுதல் ஒன்றிய குழு உறுப்பினர்கள் தங்களது கோரிக்கைகளை வேண்டுகோளாக விடுத்தனர். கூட்டத்தில் ஒன்றிய குழு உறுப்பினர்கள் ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.**

# சாத்தான்குளம் இரட்டை கொலை வழக்கை முடிக்க சிபிஐ கால அவகாசம் கோரிய மனு ஒத்திவைப்பு

**மதுரை , ஜூன்.28–**

**சாத்தான்குளம் தந்தை, மகன் கொலை வழக்கு விசாரணையை முடிக்க 5 மாதம் கால அவகாசம் கோரி சிபிஐ தாக்கல் செய்த மனு மீதான விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.**

சாத்தான்குளத்தைச் சேர்ந்த வியாபாரி ஜெயராஜ், அவரது மகன் பென்னிக்ஸ் ஆகியோர் 2020-ல் சாத்தான்குளம் போலீஸாரால் விசாரணைக்காக காவல் நிலையம் அழைத்துச் செல்லப்பட்டு உயிரிழந்தனர். இது தொடர்பாக சிபிஐ கொலை வழக்கு பதிவு செய்து காவல் ஆய்வாளர் ஸ்ரீதர், சார்பு ஆய்வாளர்கள் பாலகிருஷ்ணன், ரகு கணேஷ் மற்றும் ஒரு சிறப்பு சார்பு ஆய்வாளர், 5 காவலர்களை கைது செய்தது.

இந்த வழக்கு மதுரை முதலாவது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகிறது. விசாரணையை விரைவில் முடிக்கக்கோரி ஜெயராஜ் மனைவி செல்வராணி உயர் நீதிமன்ற கிளையில் மனு தாக்கல் செய்தார். அவரது மனுவை ஏற்று விசாரணையை முடிக்க கீழமை நீதிமன்றத்துக்கு காலக்கெடு விதித்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. அந்த காலக்கெடு இரு முறை நீட்டிக்கப்பட்டது.

இந்நிலையில், மதுரை முதலாவது கூடுதல் அமர்வு நீதிமன்றம் சார்பில், சாத்தான்குளம் தந்தை, மகன் கொலை வழக்கை முடிக்க மேலும் 5 மாதம் அவகாசம் கோரி உயர் நீதிமன்ற கிளையில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு நீதிபதி கே.முரளிசங்கர் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. சிபிஐ தரப்பில், மொத்தம் 7 சாட்சிகள் விசாரிக்கப்பட வேண்டியதுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து,மேலும்,எத்தனை சாட்சிகள் விசாரிக்கப்பட வேண்டும்? எவ்வளவு நாள் அவகாசம் தேவை என்பது குறித்து சிபிஐ தரப்பில் எழுத்துபூர்வமாக பதில் மனு தாக்கல் செய்ய உத்தரவிட்டு விசாரணையை ஜூன் 30–க்கு நீதிபதி ஒத்திவைத்தார்.

PUDUGAI VARALARU – National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# வளர்ந்து வரும் தொழில்துறை 4 பெருங்குழுமங்கள் அமைக்கப்படும்

# நாட்டை கொள்ளையடித்த ப.சிதம்பரம் பேசக்கூடாது : ஹெச்.ராஜா கண்டிப்பு





# விமர்சனங்கள் எதிரொலி : உளவுத்துறை ஏடிஜிபி தேவாசீர்வாதம் பணியிட மாற்றம்


சென்னை / புதுக்கோட்டை | 28.06.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

சாண்டோ சின்னப்பா தேவர் , தமிழகத் திரைப்படத் தயாரிப்பாளர் (பி.1915) (இ.1978)



பி. வி. நரசிம்ம ராவ் , இந்தியாவின் 9வது பிரதமர் (பி.1921) (இ.2004)



சி. சிவமகராஜா , இலங்கை ஊடகவியலாளர், அரசியல்வாதி (பி.1938) (இ.2006)



மாரியப்பன் தங்கவேலு , தமிழக-இந்திய மாற்றுத்திறனாளர், தடகள விளையாட்டு வீரர் (பி.1995)



## இன்றைய நினைவு நாள்

ஹச். பி. அரி கௌடர் , சென்னை மாகாண சட்டமன்றத் தலைவர் (பி.1893) (இ.1971)



பிரசந்தா சந்திரா மகாலனோபிசு , இந்திய அறிவியலாளர் (பி.1893) (இ.1972)



அ. க. லோகிததாசு , இந்திய இயக்குநர் (பி.1955) (இ.2009)

